**அத்தனகல்ல பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அத்தனகல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அத்தனகல்ல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**
**இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வழங்கள் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்ட காகிதாகிகள், சுகாதார பண்டங்கள், தகர்த்தல் பண்டங்கள் மற்றும் ஆயுர்வேத பண்டங்களின் பெறுவனவுகள் மீண்டும் உரிய இருப்புக் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பெறுமதி இடையே ரூபா 9,685,894 இற்கான வித்தியாசம் ஒன்று மற்றும் ஆண்டின் போது நுகரப்பட்ட மேற்கூறிய வழங்களின் பெறுமதி மற்றும் அகல்விரிவான செலவு இடையே ரூபா 9,681,947 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | இதற்காக தனியாக களஞ்சியக் கடன்கொடுத்தோர் கணக்கு பேணப்பட்டு வந்திருக்காத போதிலும் 2023 ஆண்டு முதல் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களை இனங்கண்டு சரிசெய்ய வேண்டும். |

**1.7 இணங்காமை**
**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளை சட்டத்தின் பிரிவு இலக்கம் 20 | வீதவரி பெறுமதி மதிப்பீடு 5 வருடங்களுக்கு ஒரு முறை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும் 2 உப அலுவலகங்களில் 14 வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வீதவரி பெறுமதி மதிப்பீட்டின் மீத வரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | பெறுமதி மதிப்பீடு நாளதுவரை ஆக்குவதற்காக அறிவிக்கப்பட்ட போதிலும் விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு இதுவரை சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை என. | புதிய வீதவரி ரேட்களின் படி வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணம் 571(i) | 2004 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 2 வருடங்களை மிகைத்திருந்த ரூபா 3,060,982 தொகை பெறுமதியான வைப்புக்கள் ஆதனவழிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்கள் ஆதனவழிப்புச் செய்ய வேண்டும். |
| (இ) 2016 நவம்பர் 09 திகதிய LGD/13/2016 இலக்கங் கொண்ட உள்ளுராட்சித் திணைக்கள (மேல் மாகாணம்) சுற்றறிக்கை | பெறுமதி மதிப்பீடு உடன்படிக்கை திகதி முதல் 03 வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 10 கடையறைகள் 2014 ஆண்டிலும், 5 கடையறைகள் 2009 ஆண்டிலும் இறுதியாக திருத்தப்பட்டிருந்தது. | 10 கடையறைகளின் உடன்படிக்கையின் படி 5 வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட வேண்டியிருந்ததனால் அது 2019 ஆண்டில் மேற்கொள்ள வேண்டும். அந்த கடைகளின் பெறுமதி மதிப்பீட்டிற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | பெறுமதி மதிப்பீடு மேற்கொண்டு புதிய ரேட்களின் படி வாடகை அறவிடப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மொத்த செலவை மிகைத்த வருமானம் ரூபா 59,614,955 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மொத்த செலவை மிகைத்த வருமானம் ரூபா 76,585,446 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 32,702,400 | 34,204,457 | 32,884,417 | 30,661,387 | 28,949,731 | 34,634,478 | 33,245,678 | 31,359,741 |
| (ii) | வாடகை | 12,432,745 | 39,188,773 | 31,229,555 | 38,381,665 | 17,708,241 | 17,728,466 | 15,505,896 | 5,931,626 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,583,000 | 1,597,976 | 1,597,976 | - | 1,241,500 | 1,171,100 | 1,171,100 | - |
| (iv) | ஏனைய வரு மானங்கள் | 362,839,798 | 318,695,105 | 354,025,698 | 74,143,644 | 417,210,180 | 376,418,380 | 316,230,489 | 325,650,119 |
| | | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ |
| | மொத்தம் | 409,557,943 | 393,686,311 | 419,737,646 | 143,186,696 | 465,109,652 | 429,952,424 | 366,153,163 | 362,941,486 |
| | | ======== | ======== | ======== | ======== | ======== | ======== | ======== | ======= |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும்<br>2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி பெறுமதி ரூபா 30,135,039 தொகையினுள் அறவிடப்பட வேண்டிய காலம் 10 வருடங்களை மிகைத்துள்ள பெறுமதி ரூபா 6,329,071 தொகையும் 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட பெறுமதி ரூபா 8,690,067 தொகையும் 3 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட பெறுமதி ரூபா 6,623,024 தொகையும் காணப்பட்டது. | முறைப் பிரகாரம் பரிசோதனை மேற்கொண்டு அகற்றுதல், ஆதனங்களை தடை செய்தல், நடமாடும் சேவைகள், வீட்டுக்கு வீடு சிவப்பு அறிவித்தல் வினியோகித்தல் ஆகியன செயற்படுத்தப்படுகின்றது என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) வாடகை<br>2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 37,331,243 தொகையினுள் அறவிடப்பட வேண்டிய காலம் 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட ரூபா 725,710 தொகையும் 3 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடைப்பட்ட ரூபா 19,289,340 தொகையும் காணப்பட்டது. | புதிய பெறுமதி மதிப்பீட்டிற்கு வழக்கொன்று விசாரணை செய்யப்படுவதுடன் 7 கடையறைகளின் வாடகை பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | உடன்படிக்கையின் படி நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியில் சபைக்கு கிடைத்திருந்த பொது மக்கள் முறைப்பாடுகள் 464 இல் 48 சதவீதமான 223 முறைப்பாடுகள் 2023 மே 19 திகதி வரை தீர்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணை மேற்கொள்ளல் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | பொதுமக்கள் முறைப்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 39/980 இலக்கங் கொண்ட காணி வழக்கொன்றின் தீர்ப்பின் படி அத்தனகல்ல பிரதேச சபையினால் 2019 மே 15 திகதி ரூபா 1,876,800 தொகையொன்று சபை நிதியத்திலிருந்து வழக்கின் முறைப்பாட்டு தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் நட்டத்தை அறவீடு செய்திருக்கவில்லை. | உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் கிடைத்திருந்த விசாரணை அறிக்கையின் படி எதிராளிகளான பொது மக்கள் பிரதிநிதிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தும் படி அறிவிக்கப்பட்டு இருந்தது. மக்கள் பிரதிநிதிகளுக்கு முறையான மிகைவிதிப்பு கடிதம் கிடைத்திருக்காமையால் கொடுப்பனவு மேற்கொள்ளமாட்டாது என. | நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். |

### 3.3 ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 2022 திசெம்பர் 31 திகதியளவில் அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட 3 உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 138,187 தொகை 2023 மே 19 அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | தகவல்கள் தேடப்பட்டு வருகின்றது என. | ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |